# குயின்ஸ்லாந்தில் புகையிலை மற்றும் இ-சிகரெட் பொருட்களை விற்பனை செய்வது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது தெரிந்துகொள்ள வேண்டியவை

நீங்கள் புகைபிடிக்கும் பொருட்களை விற்றால் கட்டாயம் பின்பற்ற வேண்டிய சட்டங்களை இந்த தகவல் தாள் கோடிட்டுக் காட்டுகிறது. புகையிலை, இ-சிகரெட் மற்றும் ஆவி நுகர்வு (வேப்பிங்) சாதனங்கள், மூலிகை சிகரெட்டுகள் மற்றும் உதிரிக் கலவைகள் கலவைகள், ஷிஷா மற்றும் காகிதங்கள், வடிகட்டிகள், முனைகள், நெற்றுக்கள் (பாட்கள்), திரவங்கள் மற்றும் உப்புகள், சுவைகள், வெட்டிகள், வாய்பாகங்கள் (மவுத்பீஸ்கள்), உருட்டும் இயந்திரங்கள் மற்றும் குழாய்கள் குழாய்கள் போன்ற சம்பந்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றிற்கு இச் சட்டங்கள் பொருந்தும்.

மேலும் தகவலுக்கு:

- https://www.health.qld.gov.au/public-health/topics/atod/smoking-laws/retail ஐப் **பார்வையிடவும்**
- 13 QGOV (13 74 68) ஐ **அழைக்கவும்**
- புகைபிடிக்கும் பொருட்களை சில்லறை விற்பனை செய்வதற்கான சட்டங்களை **மீளாய்வு** செய்யவும்: சில்லறை விற்பனையாளர்களுக்கான தேவைகள் வழிகாட்டி, புகையிலை மற்றும் பிற புகைபிடிக்கும் பொருட்கள் சட்டம் 1998 மற்றும் புகையிலை மற்றும் பிற புகைபிடிக்கும் பொருட்கள் ஒழுங்குமுறை விதிகள் 2021.

**உங்கள் மொழியில் மேலும் தகவலுக்கு 13 74 68 என்ற எண்ணை அழைத்து ஒரு மொழிபெயர்ந்துரைப்பாளர் வேண்டுமெனக் கோரவும்.**

### புகைபிடிக்கும் பொருட்களை விற்பனை செய்தால் நீங்கள் செய்ய வேண்டிய சில முக்கிய விடயங்கள் உள்ளன

புகைபிடிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கு முன், நீங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்:

- உங்களிடம் உரிமம் இருப்பது மற்றும் அதன் நகலை நீங்கள் புகைபிடிக்கும் பொருட்களை எங்கே விற்கிறீர்களோ அங்கே காட்சிப்படுத்துவது
- 18 வயதிற்குட்பட்ட பணியாளர்கள், புகைபிடிக்கும் பொருட்களை விற்காமல் அல்லது கையாளாமல் இருப்பது
- நீங்களும் உங்கள் ஊழியர்களும் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு புகைபிடிக்கும் தயாரிப்புகளை விற்காமல் இருப்பது
- நீங்கள் புகைபிடிக்கும் தயாரிப்புகளை காட்சிப்படுத்தாமல், விளம்பரப்படுத்தாமல், அல்லது ஊக்குவிக்காமல் இருப்பது
- நீங்கள் புகைபிடிக்கும் தயாரிப்புகளை எங்கு விற்கிறீர்கள் மற்றும் எங்கு சேகரித்து வைக்கிறீர்கள் என்பஎன்பவை தேவைகளைப் பூர்த்தி செய்வது
- தடை செய்யப்பட்ட பொருட்கள் எதையும் விற்காமல் இருப்பது
- நீங்கள் வாங்கும் புகைபிடிக்கும் தயாரிப்புகளுக்கான விலைப்பட்டியல்களின் நகல்களை உங்கள் வசம் இரண்டு வருடங்களுக்கு வைத்திருப்பது.

### புகைபிடிக்கும் தயாரிப்புகளை விற்க நீங்கள் உரிமம் பெற்றிருக்க வேண்டும் புதியது

செப்டம்பர் 1, 2024க்குள் நீங்கள் புகைபிடிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான உரிமத்தைப் பெற வேண்டும் மற்றும் உரிமத்தின் நகலை உங்கள் கடையில் காட்சிப்படுத்த வேண்டும். இந்த மாற்றத்திற்கு உங்கள் வணிகம் தயாராக உள்ளதா என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விண்ணப்பம் மற்றும் ஒப்புதல் செயல்முறை மற்றும் காலவரையறைகள் பற்றிய தகவலுக்கு (குயின்ஸ்லாந்து ஹெல்த்) இணையதளத்தைப் பார்க்கவும்.

### 18 வயதுக்குட்பட்ட ஊழியர்களால் புகைபிடிக்கும் பொருட்களை விற்கவோ கையாளவோ இயலாது புதியது

குறியீடு (செப்டம்பர்) 1, 2024 முதல் சிறுவர் தொழிலாளர்கள், புகைபிடிக்கும் பொருட்களை விற்காமல் அல்லது கையாளாமல்வதோ இருப்பதைபதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உங்கள் வணிகத்தில் 20க்கும் குறைவான பணியாளர்கள் இருந்தால், இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய புரட்டாசி (செப்டம்பர்) 1, 2025 வரை உங்களுக்கு அவகாசம் உள்ளது.

### புகைபிடிக்கும் பொருட்களை 18 வயதிற்குக் குறைவானவர்களுக்கு விற்கக் கூடாது

நீங்களும் உங்கள் ஊழியர்களும், 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு புகைபிடிக்கும் பொருட்களை விற்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

18 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைபிடிக்கும் பொருட்களை வழங்குவது குற்றமாகும் என்ற சின்னத்தை (கட்டாய சின்னத்தை) நீங்கள் விற்பனை செய்யும் இடத்தில் அல்லது உங்கள் புகையிலை தயாரிப்பு விற்பனை இயந்திரத்தில்/அதற்கு அருகில் காட்சிப்படுத்த வேண்டும்.

உங்கள் ஊழியர்களுக்கு நீங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கிய பயிற்சி யை அளிக்க வேண்டும்:

- சிறுவர்களுக்கு புகைபிடிக்கும் பொருட்களை விற்காமலிருப்பது மற்றும் வயதுக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளைச் சரிபார்ப்பது
- புகைபிடிக்கும் பொருட்களை சிறுவர்களுக்கு விற்றால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம் என்று அவர்களை எச்சரிப்பது
- ஒவ்வொரு ஊழியரிடமிருந்தும் இந்தப் பயிபயிற்சியைப் பெற்றதற்கான ஒப்புதலை பதிவு செய்வது.

புரட்டாசி (செப்டம்பர்) 1, 2024 முதல், உங்கள் உரிமத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட புகைபிடிக்கும் பொருட்களை மட்டுமே வழங்குமாறும், பணியாளர் சிறுவராக இருந்தால் புகைபிடிக்கும் பொருட்களை வழங்க வேண்டாம் என்றும் நீங்கள் பணியாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். உங்கள் வணிகத்தில் 20க்கும் குறைவான பணியாளர்கள் இருந்தால், சிறுவர் ஊழியர்களுக்கான புதிய பயிற்சித் தேவைகளைப் பூர்த்திசெய்ய (செப்டம்பர்) 1, 2025 வரை அவகாசம் உள்ளது. புதியது

13 QGOV (13 74 68) என்ற எண்ணை அழைப்பதன் மூலம் கட்டாயக் குறியீடு மற்றும் பணியாளர் பயிற்சி ஒப்புகைப் படிவங்களை நீங்கள் இலவசமாக கோரிக்கை (ஆர்டர்) செய்யலாம்.

## புகைபிடிக்கும் பொருட்களை நீங்கள் காட்சிப்படுத்தவோ, விளம்பரப்படுத்தவோ அல்லது ஊக்குவிக்கவோ கூடாது

நீங்கள் விற்கும் புகைபிடிக்கும் பொருட்களைப் பற்றி வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட வழிகள் உள்ளன.

நீங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ளலாம்:

- ஒரு கட்டாய சின்னம் மற்றும் ஒரு அனுமதிக்கப்பட்ட சின்னத்தை (' புகைபிடிக்கும் தயாரிப்புகள் இங்கே விற்கபடும்') உங்கள் விற்பனைஇடத்தில் வைத்துக்கொள்வது
- விலை அட்டையில் சேர்க்கப்பட்டுள்ள இருப்பிடம், அளவு, வடிவம், நிறம் மற்றும் அதில் சேர்க்கக்கூடிய தகவலின் வகை பற்றிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சீரான விலை சீட்டுக்களை (டிக்கெட்களை) பயன்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருட்கள் பற்றிய குறிப்பு அடங்கிய பதிவு செய்யப்பட்ட ஒரே வணிகப் பெயரைப் பயன்படுத்துவது
- அதிகபட்சம் மூன்று ஹூக்காக்களை காட்சிப்படுத்துவது (இது ஹூக்காவின் பாகங்கள், சிப்பமிடுதல் பொருட்கள் (பேக்கேஜிங்) அல்லது படங்களை உள்ளடக்கும்).

நீங்கள் செய்ய முடியாதவை :

- புகைபிடிக்கும் பொருட்களை விளம்பரப்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருட்களை காட்சிப்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருட்களை ஊக்குவிக்க போட்டிகள், பரிசுகள் அல்லது பிற ஊக்கத்தொகைகளை பயன்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருட்களின் விலைகளை உள்ளிடும் எவ்வித வணிகப் பெயர்களையும் பயன்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருளின் நுகர்வு அல்லது பயன்பாட்டை ஊக்குவிக்கும் அல்லது அதனுடன் தொடர்புடைய விளம்பர படங்கள் மற்றும் காணொளிகளை காட்சிப்படுத்துவது
- புகைபிடிக்கும் பொருட்களை நீங்கள் விற்கிறீர்கள் என்று குறிப்பாலுணர்த்தும் வேறு வார்த்தைகள் அல்லது அடையாளங்களை உங்கள் கடையில் பயன்படுத்துவது.

## புகைபிடிக்கும் பொருட்கள் சில இடங்களில் இருந்து மட்டுமே விற்கப்படவேண்டும் மற்றும் குறிப்பிட்ட வழிகளில் மட்டுமே சேர்த்துவைக்கப்பட வேண்டும்

நீங்கள் புகைபிடிக்கும் பொருட்களை ஒரு விற்பனை முனையத்திலிருந்து மட்டுமே விற்க முடியும், உதாரணமாக ஒரு கவுண்டரிலிருந்து.

உங்கள் வாடிக்கையாளர்களால் பார்க்க அல்லது அணுக முடியாத வகையில் புகைபிடிக்கும் பொருட்களை வைத்திருக்க வேண்டும், உதாரணமாக கவுண்டரின் பக்கத்திலுள்ள அலமாரி .

நீங்கள் ஒரு தற்காலிக கடையில் இருந்து புகைபிடிக்கும் பொருட்களை விற்க முடியாது, உதாரணமாக சந்தை கடை அல்லது வாகனம்.

தற்சமயம் நீங்கள் ஒரு புகையிலை விநியோக இயந்திரத்தை மதுபானம் அருந்தகம் (பார்) மற்றும் விளையாட்டு இயந்திரங்கள் (கேமிங் மெஷின்) பகுதிகள் அல்லது சூதாட்ட விடுதியில் (கேசினோக்களின்) உள்ளேயிருக்கும் மதுபான உரிமம் பெற்ற வளாகத்தில் மட்டுமே வைத்திருக்க முடியும். 1 புரட்டாசி (செப்டம்பர்) 2024 முதல், மதுபான உரிமம் பெற்ற வளாகங்கள், ஒரு சேவை கவுண்டரில் மட்டுமே புகையிலை பொருட்களை விற்க முடியும் மற்றும் புகையிலை விநியோக இயந்திரம் பணியாளர்கள் மட்டுமே இருக்கும் பகுதியில் (உதாரணமாக மதுபானம் அருந்தகம் (பாருக்கு) பின்னால்) இருக்க வேண்டும். புதியது

## பல தயாரிப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன மற்றும் அவற்றை நீங்கள் விற்பனை செய்யமுடியாது

பின்வருவனவற்றை நீங்கள் விற்க முடியாது:

- சிகரெட்டுகள், மூலிகை சிகரெட்டுகள், உதிரிப் புகையிலை புகையிலை மற்றும் ஒரு உதிரியாக இல்லாத மற்றும் குறைந்தபட்ச அளவு த்தேவைகளைப்பூர்த்தி செய்யாத பொதியிடப்படாத புகைத்தல் கலவை
- ஸ்னஸ், மூக்குப்பொடி அல்லது மெல்லும் புகையிலை போன்ற புகையற்ற புகையிலை
- ஐஸ் குழாய்கள் அல்லது பாங்ஸ்
- நிக்கட்டின் ஆவி நுகர்வு (வேப்பிங்) தயாரிப்புகள் (மருந்துச் சீட்டு இல்லாமல் மற்றும் மருந்தகம் மூலம் விநியோகிக்கப்படாதவை[1])
- புகையிலை பொருட்களை ஒத்த பொருட்கள்
- மிட்டாய் அல்லது பழச் சுவையுடைய சிகரெட்டுகள்
- எளிய பொதியில் (பிளெயின் பேக்கேஜிங்) மற்றும் சுகாதார எச்சரிக்கைத்தேவைகள் அல்லது மாநில ஒழுங்குமுறையால் பரிந்துரைக்கப்பட்ட பிற தேவைகளுக்கு இணங்காத புகைபிடிக்கும் பொருட்கள். (சட்டவிரோத புகையிலை)

உங்கள் வளாகத்தில் சட்டவிரோத புகையிலையை சேமிக்கவோ வைத்திருக்கவோ முடியாது.

உங்களிடம் புகையிலை விவிநியோகயோக விற்பனை இயந்திரம் இருந்தால், நீங்கள் அதைக்கொண்டு இ-சிகரெட்டுகள் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட தயாரிப்புகள், மூலிகை சிகரெட்டுகள் அல்லது உதிரியான புகைபிடித்தல் கலவையை விற்க முடியாது.

## உங்கள் விலைப்பட்டியல்களின் நகலை நீங்கள் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு வைத்திருக்க வேண்டும்

புதியது

உங்கள் புகைபிடித்தல் பொருட்களை வாங்கியதற்கான விலைப்பட்டியல்களின் நகலை குறைந்தது இரண்டு வருடங்களுக்கு நீங்கள் வைத்திருக்க வேண்டும்.

இந்த தகவல் தாள் பொதுவான தகவல்களை வழங்குகிறது. உங்கள் வணிகத்திற்குப் பொருந்தக்கூடிய அனைத்து சட்டத் தேவைகளையும் நீங்கள் பூர்த்தி செய்வதை உறுதிசெய்ய, நீங்கள் சுயாதீனமான சட்ட ஆலோசனையைப் பெற வேண்டும்.

புகையிலை விளம்பரம் மற்றும் புகையிலை பேக்கேஜிங் பற்றிய ஆஸ்திரேலிய அரசாங்கச் சட்டங்கள் உங்கள் வணிகத்திற்கும் பொருந்தும். இந்தத் தகவல் இந்தத் தகவல் தாளில் குறிப்பிடப்படவில்லை, ஆனால் https://www.health.gov.au/topics/smoking-and-tobacco/about-smoking-and-tobacco/smoking-and-tobacco-laws-in-australia இல் கிடைக்கும்.

1. இது மருந்துகள் மற்றும் விஷங்கள் சட்டம் 2019 ஆல் ஒழுங்குப்படுத்தபடுகிறது

Queensland Government

ஆனி (ஜூன்) 2023